

மாதவரம் வடக்கு பகுதி மற்றும் 19 ஆவது வட்ட தேர்தல் பணிமனை மாத்தூர் எம்எம்டிஏ முதல் பிரதான சாலையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில், மாதவரம் தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ. அருண், 19வது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் முன்னிலையில் மாதவரம் தொகுதி வேட்பாளர், மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணி கட்சியின் தேமுதிக வேட்பாளர் டி. கிருஷ்ணமூர்த்தி, அறிமுகம் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், தலைமையில் நடைபெற்றது இதில் கழக கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி கொட்டும் முரசு சின்னத்திற்கு வாக்கு கேட்டு ஆதரவு திரட்டினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம் பூபதி, ஒன்றிய கழகச் செயலாளர் என்.கிருஷ்ணன் உள்பட திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### புழல் எம்.நாராயணன் தலைமையில் கா. தாமரைச்செல்வன் முன்னிலையில்

# மாதவரம் வடக்குப் பகுதி - 19 ஆவது வட்ட தலைமை தேர்தல் பணிமனை - எஸ்.சுதர்சனம் திறந்து வைத்தார்!

## ஜெ.அருண் – இ.கண்ணப்பன் – கே.கருணாகரன் – வி.ஆர்.குப்பன் – பி.எஸ்.சந்துரு பங்கேற்பு!

மாதரவம், ஏப்.7-

மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் மாதவரம் எம்எல்ஏ அவர்களை ஆதரித்து மாதவரம் வடக்கு பகுதி தேர்தல் பணிமனை மாத்தூர் 19வது வட்டத்தில் திறக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆதரவு பெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ ஆதரித்து மாதவரம் வடக்கு பகுதி தேர்தல் பணிமனை 19வது வட்டம் மாத்தூர் முதல் பிரதான சாலையில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையிலும், 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் முன்னிலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்து கொண்டு தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார்.

முன்னதாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண், வட்டச் செயலாளர்கள் இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ். சந்துரு, வி. ஆர்.குப்பன், கவுன்சிலர் க. காசிநாதன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, ஆ. ராஜேந்திரன்,பி. நிர்மல்குமார்,கே.ராஜா, வி. கார்த்திகேயன், நா. மோகன் குமார் நாகூரார், வட்ட நிர்வாகிகள் துளசி, ரகுவரன், கதிரவன், திருமலை, ஹரி சுப்பிரமணியன், சையத் அப்சல், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் எஸ்.உதயகுமார், கே. ஏழுமலை, துரை தசரதன், பி. ஜெயராஜ்,பி. துரைசாமி, கே. சேரலாதன், இளைஞர் அணி எம். என்,அஜய் தென்னவன்,ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், சரவணன், வினோத்குமார்,சாய் சந்திப் ,சந்தோஷ், அப்புறம் காஞ்சனா சுகாசினி, தேவி, சரஸ்வதி, பெரியநாயகி, கஸ்தூரி, பாகமுகவர்கள் கலைச்செல்வி, சுந்தரி, சாந்தகுமார், நாகராஜ், விக்ரமன், ரோஸி, சுமதி,

தமிழ்ச்செல்வி, துளசி, செல்லப்பா, பிரவீன், குமார், மலர்மன்னன், சின்ன மாத்தூர் குகன், சிவராமன், சுமன், எஸ்.எஸ். செல்வகுமார், ஹரி பிரசாத், லோகன், சிவபிரகாசம், கிளன், புஷ்ப நதி, நெடுஞ்செழியன், சேவை செல்வராஜ், ஞானகிராமன், அரசு, கங்காதரன், சின்ன மாத்தூர் சுரேஷ், அண்ணாதுரை, பன்னீர்செல்வம், கிருஷ்ணன், கடப்பாக்கம் கிருபாகரன், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் ரங்கநாயகி, ஜேசிபி பாண்டியன், சாந்தகுமார்,பிரபு, தமிழரசன், விஜயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் செய்யூர் தொகுதி வி.சி.க. வேட்பாளர்

# ம.சிந்தனைச்செல்வன் திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியத்தில் வாக்கு சேகரிக்கிறார்!

## ஒன்றியச் செயலாளர் இ.சரவணன் அறிக்கை!

செய்யூர் , ஏப்.7,

திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியச் செயலாளர் இ.சரவணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

செய்யூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பிர் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சி வெற்றி வேட்பாளர் ம.சிந்தனைச் செல்வன் நாளை (8.4.2026 புதன்கிழமை) காலை 7 மணிக்கு வெங்கப்பாக்கத்தில் பொதுமக்களை சந்தித்து வாக்குசேகரிக்கிறார்.

தொடர்ந்து ம.சிந்தனைச் செல்வன், புதுப்பட்டினம் ஊராட்சி பெருமாள் சேரியில் 7.30 மணிக்கும், விட்டிலாபுரத்தில் 8 மணிக்கும், விட்டிலாபுரம் உராட்சி சிட்டிலம்பாக்கத்தில் 8.30 மணிக்கும், பேரம்பாக்கத்தில் 9 மணிக்கும், லட்டூர் ஊராட்சி கோட்டைமேட்டில் 9.30 மணிக்கும், லட்டூரில்10 மணிக்கும், அங்காம்பட்டில் 10.30 மணிக்கும், லட்டூர் பைராகிமடத்தில் 10.40 மணிக்கும், பெரிய காட்டுப்பாக்கத்தில் 11 மணிக்கும், அமிஞ்சிகரை ஊராட்சி அமிஞ்சிகரையில்11.30 மணிக்கும், வீராபுரத்தில் 12 மணிக்கும், சூரடிமங்கலத்தில் 12.30 மணிக்கும் நெரும்பூரில் 1 மணிக்கும், நல்லாத்தூரில்1.30 மணிக்கும், ஆயப்பாக்கத்தில் 2மணிக்கும், வசுவசமுத்திரத்தில் 3 மணிக்கும், வாயலூரில் 3.30 மணிக்கும் வாக்குசேகரிக்கிறார்.

தொடர்ந்து ம.சிந்தனைச் செல்வன், வசுவசமுத்திரம் ஊராட்சி அகமது நகரில் 3.45 மணிக்கும், புதுப்பட்டினத்தில் 4 மணிக்கும் வாக்கு சேகரிக்கிறார்.

எனவே திருக்கழுக் குன்றம் தெற்கு ஒன்றியக் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி ஒன்றியச் செயலாளர் இ.சரவணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

# சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு வேண்டுகோள்!

சென்னை ஏப்: 7

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர். பாலு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் வருகிற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர்கள் மயிலாப்பூர் சட்டமன்ற வேட்பாளர் த.வேலு, தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ராஜா அன்பழகன் ஆகியோரை ஆதரித்து கழக வர்த்தக அணி சார்பில் பரப்புரை மேற்கொள்ள இருப்பதால் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மயிலை பகுதி கிழக்கு,மேற்கு அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தியாகராய நகர் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று ( 7.4.2026 செவ்வாய்க்கிழமை) மாலை 4:00 மணி அளவில் மயிலாப்பூர் கபாலி கோயில் குளம் எதிரில் மயிலை தொகுதி தேர்தல் பணிமனையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர். பாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

பெரம்பலூர், ஏப். 07-

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டாக்டர் ச.த.ஜெயலட்சுமி அறிமுக கூட்டம் மற்றும் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய நிர்வாகி கள் கூட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையில் செட்டிகுளத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் கலந்து கொண்டு வேட்பாளர் டாக்டர் ச.த.ஜெயலெட்சுமியை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று பேசினார்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் ராஜேந்திரன், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் சிவா ஐயப்பன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் சர்புதின், ம.தி.மு.க மாவட்ட செயலாளர் ஜெயசீலன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர் ஆர்.அருண், வ.சுப்ரமணியன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ்,

மற்றும் தி.மு.க. கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்,குரூர் கிராம அ.தி.மு.க. கிளைச் செயலாளர் விஜயகுமார் தலைமையில் 25 பேர் கிளை கழகத்தை கலைத்துவிட்டு, அக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க. வில் இணைந்தனர்.

அவரை மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீ சன் பொன்னாடை அணிவித்து வரவேற்று கட்சியில் இணைத்துக் கொண்டார்.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

## (6 வது பட்டியல்)

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - | பார்வையாளர் |
|---|---|---|
| செங்கல்பட்டு | – | வழக்கறிஞர் ஜான் சாமுவேல் |
| விருகம்பாக்கம் | – | வி. பி. மணி |
| பல்லடம் | – | தென்றல் செல்வராஜ் |
| ராதாபுரம் | – | VSR. ஜெகதீசன் |
| கே வி குப்பம் | – | காசிமுத்துமாணிக்கம் |
| சேலம் தெற்கு | – | வழக்கறிஞர் சிவசுப்பிரமணியன் |
| திருச்சி கிழக்கு | – | கே.என்.சேகரன் |
| மணப்பாறை | – | வழக்கறிஞர் முரளிகிருஷ்ணன் |
| திருச்செங்கோடு | – | செ.காந்திசெல்வன் |
| பவானிசாகர் | – | எல்.பி. தர்மலிங்கம் |
| தாம்பரம் | – | வழக்கறிஞர் அருண் |
| அவினாசி | – | வழக்கறிஞர் பாபு ராஜாராம் |
| மதுரை தெற்கு | – | வ.வேலுசாமி |
| செய்யூர் | – | க. அன்பு செல்வன் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 06.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியின் தி.மு.கழக வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வட்டகழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் அறிவிப்பிற்கிணங்க, மாவட்ட பிரதிநிதி பாகபொறுப்பாளருமான வழக்கறிஞர் பொன்.ஜெய்சிங், பகுதி பொறியாளர் அணி அமைப்பாளரும், பாகபொறுப்பாளருமான ஆர். எஸ்.ரமேஷ் ஆகியோர் வரவேற்பில் 79, 81, 82, 92, 93 ஆகிய பாகங்களில் கழக தேர்தல் பிரச்சார இசைக்குழு மிகுந்த எழுச்சியுடன் பிரச்சாரம் செய்தனர். இந்நிகழ்வில் பாக தலைவர்கள் கே.அன்சர்கான், ஒய்.எம்.எஸ்.கே.நரேஷ்குமார், ஆ.அருண்குமார், கே.சி.என்.அன்பழகன் உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், பாக களப்பணியர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.




சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதிக்குட்பட்ட 177வது வார்டில் உள்ள விஜிபி செல்வா நகரில் கட்டப்பட்டு வரும் திருமண மண்டப பணிகளை வார்டு மாமன்ற உறுப்பினரும், கழக தேர்தல் பணிக்குழு செயலாளருமான வேளச்சரி பெ.மணிமாறன் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாநகராட்சி உயர் அதிகாரிகள் பொதுப்பணித்துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகள், ஒப்பந்ததாரர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ம.பா. செபாஸ்டின்

## ஏப்ரல் 7 (2010)



1955ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம், 78வது வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து முப்பது ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

டெல்லியில் இலங்கை முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனேவிற்கு முரசொலி மாறன் அவர்களுடன் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இவர் உள்ளிட்ட ஐவர்மீது அ.தி.மு.க. அரசினால் போடப்பட்ட பொய் வழக்கில், நீதிமன்றத்தால் கலைஞர் அவர்களுடன் விடுதலை செய்யப்பட்டவர்.

1955ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தபோது, அவரிடம் தேதியுடன் பெற்ற கையெழுத்தை ஐம்பதாண்டுகள் பாதுகாத்து வைத்து, 2005ஆம் ஆண்டு, அவரது கையெழுத்தை காட்டியபோது, கலைஞர் அவர்கள் "உன்னைப் போல நீ இருக்காதே!'' என்று எழுதி கையொப்பமிட்டு வாழ்த்தினார்.

இந்தி ஆணை நகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.